மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் (பணியாளர்) செயல்முறை நடவடிக்கைகள்

வழங்குபவர்: திரு.த.இரகு

ந.க. எண்.15494/எஸ்2/2021 நாள்.31.08.2021

பொருள்: பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நேரடி நியமனம் – இளநிலை உதவியாளர்களுக்கு பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. மீன்துறை இயக்குநரின் செயல்முறை நடவடிக்கை எண்.12969/எம்5/2020, நாள்.24.07.2020.
2. மீன்துறை இயக்குநரின் செயல்முறை நடவடிக்கை எண்.12969/எம்5/2020, நாள்.13.11.2020.

******

ஆணை:

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட கீழ்க்காணும் பணியாளர்களுக்கு பார்வையில் காணும் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இயக்குநரின் செயல்முறை நடவடிக்கையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டது. மேலும், பணி நியமனம் பெற்ற இளநிலை உதவியாளர்கள் பின்வரும் நாட்களில் பணியில் சேர்ந்துள்ளனர்.

| வ. எண் | அலுவலர்களின் பெயர் திரு / திருமதி/செல்வி | பணியில் சேர்ந்த நாள் | தற்போது பணிபுரியும் அலுவலகம் |
|---|---|---|---|
| 01 | து.அருண் சுதாகர் | 06.08.2020 மு.ப | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் அலுவலகம், சென்னை |
| 02 | சு.சுதாகர் | 07.08.2020 மு.ப | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் (தெற்கு) நாகப்பட்டினம் |
| 03 | நா.சக்திவேல் | 14.08.2020 மு.ப | உதவி செயற்பொறியாளர் (மீன்பிடி துறைமுக திட்ட உபகோட்டம் நாகப்பட்டினம்) |
| 04 | சு.சுஹாசினி | 05.08.2020 மு.ப | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் (மண்டலம்) கன்னியாகுமரி (இருப்பு) நாகர்கோவில் |
| 05 | ப்பி.இ.பிரேம் | 05.08.2020 மு.ப | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர், சென்னை |
| 06 | மா.வென்னிலா | 03.08.2020 மு.ப | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் (மண்டலம்) தருமபுரி |
| 07 | செ.குணசேகரன் | 05.08.2020 மு.ப | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் அலுவலகம், சென்னை |
| 08 | கு.மணிமாறன் | 05.08.2020 மு.ப | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் (மண்டலம்) இராமநாதபுரம் |

| | | | |
|---|---|---|---|
| 09 | ஜெ.நஷ்ரின் பானு | 06.08.2020 மு.ப | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர், சிவகங்கை |
| 10 | இரா.திவ்யா | 03.08.2020 மு.ப | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர், விருதுநகர் |
| 11 | ர.லோகேஷ் | 03.08.2020 மு.ப | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் அலுவலகம், சென்னை |
| 12 | நி.சரவணகுமார் | 10.12.2020 மு.ப | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் அலுவலகம், சென்னை |

ஆகவே, தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனை) சட்டம் 2016 விதி 28 (i)–ன் படி தனியர்களின் பணியினை அவர்கள் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையில் இளநிலை உதவியாளர்களாக பணியில் சேர்ந்த நாள்முதல் வரன்முறைப்படுததி ஆணை வழங்கப்படுகிறது.

மேலும், பணியில் சேர்ந்த நாள்முதல் இளநிலை உதவியாளர் பதவியில் தொடர்ந்து வரும் மூன்றாண்டுகளில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் ஆணையிடப்படுகிறது.

தமிழ்நாடு அமைச்சுப்பணிகளுக்கான சிறப்பு விதிகளின் விதி 34–ன் படி, தகுதிகாண் பருவ காலத்தில், தமிழ்நாடு மீன்துறை நடைமுறை நூல் பாகம் 1–ல் தேர்ச்சி பெற வேண்டும். மேலும் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில வழங்கப்படும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படைப் பயிற்சியினை இரண்டாண்டுகளுக்குள் முடிக்க வேண்டும். மேற்குறித்த தேர்வுகளில் அதிகபட்சமாக 5 ஆண்டு காலம் தேர்ச்சி பெறாமல் இருந்தால் இளநிலை உதவியாளர்களது தகுதிகாண் பருவம் முடிக்கப்பட மாட்டாது. மேலும் பணியிலிருந்து நீக்கம் செய்யப்படுவர் (Termination of Service) என தெரிவிக்கப்படுகிறது.

சென்னை / மதுரை கிளை உயர்நீதிமன்றங்களிலுள்ள நிலுவையிலுள்ள வழக்கின் இறுதி ஆணைக்கு உட்பட்டு இவ்வாணை வழங்கப்படுகிறது.

1-9-2021

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை
துணை இயக்குநர்(பணியாளர்)

பெறுநர்
சம்பந்தப்பட்ட பணியாளர்கள்

நகல்
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் (மண்டலம்), தருமபுரி/ இராமநாதபுரம்/ கன்னியாகுமரி
உதவி செயற்பொறியாளர் (மீன்பிடி துறைமுக திட்ட உபகோட்டம் நாகப்பட்டினம்)
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர், நாகப்பட்டினம்(தெற்கு) / சென்னை/சிவகங்கை/விருதுநகர்
'எம்5' உதவியாளர், தலைமையலுவலகம்,
'எஸ்2' இருப்பு கோப்பு.